சொல்லி பல்வேறு திட்டங்களுக்கெல்லாம் பரிந்துரை விண்ணப்பங்களை அனுப்புகின்றபோது அங்கே இருக்கின்ற அதிகாரிகள் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் பட்டியலில் பெயர் இல்லை என்று சொல்லி அதைத் திருப்பி அனுப்பியதற்கெல்லாம் முதல்வர் அவர்களுடைய இந்தப் பதிலின் மூலமாக நிச்சயமாக தமிழ்நாட்டில் இருக்கின்ற ஏழை எளியோர்களுக்கு உதவிகள் கிடைக்கும் என்பதை இந்த இடத்திலே நிச்சயித்துக் காண்பித்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை எங்கள் தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடித்துவிடுங்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: இதுவரையிலும் எனக்கு ஒரு வாய்ப்பு கொடுத்து, பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இந்தப் பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகின்ற மிகப் பெரிய வாய்ப்பை எனக்குக் கொடுத்து, என்னை இந்தத் தமிழகம் மட்டுமல்ல; உலகம் எங்கும் அறியச் செய்த என்னுடைய தலைவர் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கும் நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

6. அறிவிப்பு

சட்டமன்றப் பேரவைச் செயலக வளாகத்தில் உறுப்பினர்களுக்கான ஓய்வு அறைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை உறுப்பினர்களின் வசதிக்காகப் பேரவைச் செயலக வளாகத்தில் புதுப் பொலிவுடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆண்கள் ஓய்வு அறை மற்றும் புதுப்பிக்கப்பட்டு மாற்றி அமைக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மகளிர் ஓய்வு அறை ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்று தங்கள் திருக்கரங்களால் திறந்து வைத்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் இவற்றினைப் பயன்படுத்திக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கின்றேன்.